**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**
**பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு – மார்ச் / ஏப்ரல்– 2025**
**சமூக அறிவியல் (தமிழ் வழி)**
**விடைக்குறிப்பு**

**மொத்த மதிப்பெண்கள்: 100**

## பகுதி –1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14x 1 = 14**

| வினா எண் | குறியீடு | விடை | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1. | (ஆ) | ஜப்பான் | 1 |
| 2. | (இ) | போப் | 1 |
| 3. | (ஆ) | 1976 | 1 |
| 4. | (ஆ) | கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது | 1 |
| 5. | (இ) | முண்டா கிளர்ச்சி | 1 |
| 6. | (இ) | அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை | 1 |
| 7. | (அ) | பருத்தி | 1 |
| 8. | (இ) | மகராஷ்டிரம் | 1 |
| 9. | (ஆ) | மக்களியல் | 1 |
| 10. | (ஆ) | சிறுதானியங்கள் | 1 |
| 11. | (இ) | தமிழ்நாடு | 1 |
| 12. | (இ) | எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு | 1 |
| 13. | (ஆ) | மதிப்பு கூட்டு முறை | 1 |
| 14. | (ஈ) | 1994 | 1 |

## பகுதி–II

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண். 28 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் .** 10x2=20

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 15. | • 1894இல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்காட்டாயமாக ஒரு போரை மேற்கொண்டது.<br>• இச்சீன–ஜப்பானியப் போரில் சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்கவைத்தது.<br>• போருக்கு பிறகு ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக்கொண்டது.<br>• இந்நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவின் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது. | 2 (ஏதேனும் இரண்டு) |

| | | |
|---|---|---|
| 16. | • பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது.<br>• வேளாண் உற்பத்தி பொருள்களின் விலை பாதியாக குறைந்தது. ஆனால் விவசாய நிலத்திற்கு கொடுக்க வேண்டிய குத்தகை தொகையில் மாற்றம் ஏதுமில்லை.<br>• விவசாய விளைபொருள்களின் விலையைப் பொறுத்த மட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் இரண்டு மடங்காகிற்று. | 2<br><br>(ஏதேனும் இரண்டு) |
| 17. | • வரிவசூலிப்பது,<br>• நிலப்பகுதிகளை நிர்வகிப்பது,<br>• வழக்குகளை விசாரிப்பது,<br>• சட்டம்ஒழுங்கைப்பாதுகாப்பது.<br>• அவர்களது காவல் காக்கும் கடமை படிக் காவல் என்றும் அரசுக் காவல் என்றும் அழைக்கப்பட்டது. | 2<br>(ஏதேனும் நான்கு) |
| 18. | • சதாரா<br>• சம்பல்பூர்<br>• பஞ்சாபின் சில பகுதிகள்<br>• ஜான்சி<br>• நாக்பூர் | 2<br>(ஏதேனும் நான்கு) |
| 19. | • 1916இல் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கினார்.<br>• அவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்றார்.<br>• தன்னுடைய திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்காக அன்னிபெசன்ட் நியூஇந்தியா, காமன்வீல் எனும் இரண்டு செய்தித் தாள்களைத் தொடங்கினார். | 2<br><br>(ஏதேனும் இரண்டு) |
| 20. | • தீபகற்ப இந்தியாவின் மிகப்பெரிய பீடபூமி.<br>• இது தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது.<br>• சுமார் 7 லட்சம் சதுர கி.மீ பரப்பளவையும்<br>• கடல் மட்டத்திலிருந்து 500 மீமுதல் 1000 மீ உயரம் வரையும் அமைந்துள்ளது. | 2<br>(ஏதேனும் இரண்டு) |
| 21. | • குளிர்காலம்<br>• கோடைக்காலம்<br>• தென்மேற்கு பருவக்காற்று காலம் அல்லது மழைக்காலம்<br>• வடக்கிழக்கு பருவக்காற்று காலம் | 2 |
| 22. | • தன்னிறைவுவேளாண்மை<br>• இடப்பெயர்வுவேளாண்மை<br>• தீவிரவேளாண்மை<br>• வறண்டநிலவேளாண்மை<br>• கலப்புவேளாண்மை<br>• படிக்கட்டுமுறைவேளாண்மை | 2<br>(ஏதேனும் நான்கு) |
| 23. | • பாம்பன்<br>• முயல்தீவு<br>• குருசடை<br>• நல்லதண்ணி தீவு<br>• புள்ளிவாசல்<br>• ஸ்ரீரங்கம்<br>• தீவுத்திடல்<br>• காட்டுப்பள்ளித்தீவு<br>• உப்புதண்ணித்தீவு<br>• குவிப்பில் தீவு<br>• விவேகானந்தர் நினைவு பாறை | 2<br>(ஏதேனும் நான்கு) |

| | | |
|---|---|---|
| **24.** | • மேட்டூர்அணை<br>• அமராவதிஅணை<br>• சாத்தனூர்அணை<br>• வைகைஅணை<br>• பாபநாசம்அணை<br>• பவானிசாகர்அணை<br>• கிருஷ்ணகிரிஅணை<br>• முல்லைப்பெரியாறுஅணை<br>• மணிமுத்தாறுஅணை<br>• பரம்பிக்குளம்ஆழியாறுதிட்டம் | **2 (ஏதேனும் நான்கு)** |
| **25.** | • முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள்<br>• உயில்<br>• திருமணம் சார்ந்த வழக்குகள்<br>• நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் | **2** |
| **26.** | • ஜவகர்லால்நேரு<br>• டிட்டோ<br>• நாசர்<br>• சுகர்னோ<br>• குவாமேநிக்ரூமா | **2** |
| **27.** | "எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையை கொண்டிருக்கும் போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவு பாதுகாப்பு இருக்கிறது." (FAO, 2009). | **2** |
| **28.** | • ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் – ஜனவரி 16,2016<br>• ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன் முயற்சித் திட்டமாகும்.<br>• இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல் ஆகும். | **2 (ஏதேனும் இரண்டு)** |

## பகுதி– III

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண்.42 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்** **10×5=50**

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| **29.** | (i) கயத்தாறு<br>(ii) கோபால கிருஷ்ண கோகலே<br>(iii) நீலகிரி வரையாடு<br>(iv) 51A<br>(v) தொழில் | **5** |

| | | |
|---|---|---|
| 30. | **<u>வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சாரத்துக்கள்</u>**<br>• போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் மையநாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத் தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.<br>• ஜெர்மன்படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.<br>• ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.<br>• ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.<br>• ரஷ்யா உடன் செய்து கொள்ளப்பட்ட பிரெஸ்ட்– லிடோவஸ்க் உடன் படிக்கையையும் பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன் படிக்கையையும் திரும்பப் பெற்றுக்கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.<br>• அல்சேஸ்–லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித்தரப்பட்டன.<br>• போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது. | **5**<br>**(ஏதேனும் ஐந்து)** |
| 31. | ❖ **<u>உலகம் இரு அணிகளாகப் பிரிதல்:</u>**<br>• இரண்டாவது உலகப்போர் உலகில் அடிப்படையானதும் முக்கியமானதுமான பல மாற்றங்களை ஏற்படுத்தியது.<br>• வல்லரசுகள் தலைமையிலான அணிகளைக் கொண்ட உலகம் இரு துருவங்களானது.<br>• ஒரு அணி கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்ட அமெரிக்காவால் தலைமையேற்கப்பட்டது.<br>• மற்றொரு அணிக்கு சோவியத் யூனியன் தலைமை தாங்கியது.<br>• கம்யூனிச நாடுகள், கம்யூனிசமல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாகப் பிரிக்கப்பட்டது.<br>❖ **<u>அணு ஆயுதப் பரவல்:</u>**<br>• அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத் யூனியனும் அணு ஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கிக் குவித்தன.<br>• பல நாடுகளில் இராணுவத்திற்கான செலவினங்கள் உச்சத்தை எட்டின.<br>❖ **<u>பன்னாட்டு முகமைகள்:</u>**<br>• பல பன்னாட்டு முகமைகள் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.<br>❖ **<u>காலனி நீக்கச் செயல்பாடு</u>**<br>• காலனி நீக்கச் செயல்பாட்டின் அடிப்படையில் காலனியாதிக்கச் சக்திகள் தங்களது காலனிகளுக்கு விடுதலை வழங்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர்.<br>• அதில் இந்தியா முதலாவதாய் சுதந்திரம் பெற்றது. | **5**<br>**(ஏதேனும் மூன்று தலைப்புகள்)** |

**32.**

**அ) (I)** **<u>வேறுபடுத்துக.</u>**

**<u>வடகிழக்கு பருவக் காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று.</u>**

| வ. எண் | வடகிழக்கு பருவக்காற்று | வ. எண் | தென்மேற்கு பருவக்காற்று. |
|---|---|---|---|
| 1 | நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசுகிறது. | 1 | கடலிலிருந்து நிலத்தை நோக்கி வீசுகிறது |
| 2 | காலம் : அக்டோபர் முதல் நவம்பர் வரை. | 2 | காலம் : ஜீன் முதல் செப்டம்பர் வரை. |

**2** (வினா தொடர்புடைய ஏதேனும் இரண்டு கருத்துகள்)

**(II)** **<u>புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலாவளங்கள்.</u>**

| வ. எண் | புதுப்பிக்க இயலும் வளங்கள் | வ. எண் | புதுப்பிக்க இயலா வளங்கள். |
|---|---|---|---|
| 1 | பயன்பாட்டிற்கு பிறகு இயற்கை முறையில் மீட்டுருவாக்கம் செய்து கொள்கின்றன. | 1 | பயன்பாட்டிற்கு பிறகு மீண்டும் மீட்டுருவாக்கம் செய்ய இயலாவளங்கள். |
| 2 | எ.கா : சூரிய சக்தி, காற்று சக்தி | 2 | எ.கா : நிலக்கரி, பெட்ரோலியம், |

**2** (வினா தொடர்புடைய ஏதேனும் இரண்டு கருத்துகள்)

**ஆ)** **<u>காரணம் கூறுக</u>**

- புவிப்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல வெப்பநிலை குறைகிறது.
- ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5°C என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது.

**1** (ஏதேனும் ஒரு கருத்து)

**33.**

❖ **<u>ராஜாராம் மோகன் ராய்</u>**

- விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள உரிமை உடையவர்கள் எனும் கருத்தை முன்வைத்தார்.
- 'சதி' எனும் உடன்கட்டையேறும் பழக்கத்தை ஒழித்துச்சட்டம் இயற்றியதில் முக்கியபங்கு வகித்தார்.
- பெண்களுக்குக் கல்வி வழங்கப்பட வேண்டும் எனும் கருத்தை வலுவாக முன்வைத்தார்.

❖ **<u>ஈஸ்வர சந்திர வித்யாசாகர்</u>**

- பெண் கல்வியை மேம்படுத்துவதில் முக்கியப்பங்காற்றிய அவர் பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவிகள் செய்தார்.
- இந்து சமூகத்தில் குழந்தைப் பருவத்திலேயே விதவைகளான சிறுமிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவே தனது முழுவாழ்வையும் அர்ப்பணித்தார்.
- இவர் தலைமையேற்ற இயக்கத்தின் விளைவாய் 1856இல் மறுமண சீர்திருத்தச் சட்டம் (விதவைகள் மறுமணச் சட்டம்) இயற்றப்பட்டது.

❖ **<u>மகாதேவ் கோவிந்த் ரானடே</u>**

- சாதி மறுப்பு, சமபந்தி, சாதி மறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்.
- விதவை மறுமணச்சங்கம் நிறுவினர்.

❖ **<u>சுவாமி தயானந்த சரஸ்வதி</u>**

- குழந்தைத் திருமணம், விதவை மறுமணத்திற்கு மறுப்பு போன்ற பழக்கங்களும் மறை நூல்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவித்தார்.

**5** (ஏதேனும் மூன்று தலைப்புகள்)

| | | |
|---|---|---|
| | ❖ **<u>ஜோதிபாபுலே</u>**<br>• குழந்தை திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.<br>• ஜோதிபா பெற்றோரில்லா குழந்தைளுக்கென்று விடுதிகளையும் விதவைகளுக்கென காப்பகங்களையும் உருவாக்கினார். | |
| **34.** | தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன. அவை பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.<br>**அவை: 1) கிழக்குநோக்கி பாயும் ஆறுகள் 2) மேற்குநோக்கிபாயும்ஆறுகள்**<br>**<u>1) கிழக்குநோக்கி பாயும் ஆறுகள்</u>**<br>**<u>அ. மகாநதி</u>**<br>• இந்நதி சத்தீஸ்கார் மாநிலத்தில் உற்பத்தியாகி ஒடிசா வழியாக வங்காளவிரிகுடாவில் கலக்கிறது.<br>• சுமார் 851 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.<br>**<u>ஆ. கோதாவரி</u>**<br>• இந்நதி மகாராஷ்ட்ரா மாநிலத்தில் உற்பத்தியாகி ஆந்திரப்பிரதேசம் வழியாக வங்காளவிரிகுடாவில் கலக்கிறது.<br>• தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறு<br>• இதன் நீளம் சுமார் 1465 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.<br>**<u>இ. கிருஷ்ணா</u>**<br>• மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் உள்ளமேற்கு தொடர்ச்சி மலையில் மகா பலேஷ்வர் என்ற பகுதியில் ஊற்றாக உருவாகி ஆந்திரப்பிரதேசம் வழியாக வங்காளவிரிகுடாவில் கலக்கிறது.<br>• சுமார் 1400 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.<br>**<u>ஈ. காவிரி</u>**<br>• காவிரிஆறு கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக் காவிரியில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில் பூம்புகார் என்ற இடத்தில் வங்கக்கடலில் கலக்கிறது.<br>• சுமார் 805 கி.மீ நீளத்திற்கு பாய்கிறது.<br>**<u>2) மேற்குநோக்கிபாயும்ஆறுகள்</u>**<br>**<u>அ. நர்மதை</u>**<br>• இந்நதி மத்தியப்பிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.<br>• சுமார் 1312கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.<br>**<u>ஆ. தபதி</u>**<br>• இந்நதி மத்தியப்பிரதேசத்தில் உள்ள பெட்டூல் மாவட்டத்தில் முல்டாய் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.<br>• சுமார்724கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது. | **5**<br>**(ஏதேனும் ஐந்து தீபகற்ப ஆறுகள்)** |
| **35.** | ❖ **<u>வண்டல்மண்</u>**<br>• சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படிய வைப்பதினால் உருவாகின்றன.<br>• கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆற்றுப் பள்ளத்தாக்குகள்,<br>• உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், ஹரியானா, மேற்குவங்காளம் மற்றும் பீகார் மாநிலங்களில் உள்ள சமவெளிப்பகுதிகள். | |

| | | |
|---|---|---|
| | ❖ **<u>கரிசல்மண்</u>**<br>• தக்காணப்பகுதியில் உள்ளபசால்ட் பாறைகளில் இருந்து உருவானது<br>• மகாராஷ்டிரா மற்றும் மாளவப் பீடபூமி கத்தியவார் தீபகற்பம், தெலங்கானா, ராயல்சீமா மற்றும் கர்நாடக மாநிலத்தின் வடபகுதி.<br>❖ **<u>செம்மண்</u>**<br>• பழமையான படிகபாறைகளான கிரானைட், நைஸ் போன்ற பாறைகள் சிதைவடைவதால் உருவாகின்றன.<br>• தக்காண பீடபுமியின் கிழக்குப்பகுதி,கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா<br>❖ **<u>சரளைமண்</u>**<br>• வெப்பம் மற்றும் குளிர் அடுத்தடுத்து நிகழும் போது மண்சுவரல் காரணமாக உருவாகிறது.<br>• அசாம், ஒடிசா, மேற்குத் தொடர்ச்சிப் பகுதியின் அடிவாரப் பகுதிகள்<br>❖ **<u>காடு மற்றும் மலைமண்</u>**<br>• பனிமழை வெப்பநிலை வேறுபாடுகளால் பௌதீகசிதைவின் காரணமாக உருவாகின்றது.<br>• இமயமலை, மேற்கு தொடர்ச்சி மலைகள், கிழக்கு தொடர்ச்சி மலைகள்.<br>❖ **<u>வறண்ட பாலை மண்</u>**<br>• வறண்ட கால நிலை, அதிகவெப்பம் காரணமாக ஆவியாதல் அதிகமாக இருப்பதால் மேல் மண் வறண்டு காணப்படுகிறது.<br>• இராஜஸ்தான், குஜராத்தின் வடபகுதி, பஞ்சாப் மாநிலத்தின் தென் பகுதி.<br>❖ **<u>உப்பு மற்றும் கார மண்</u>**<br>• வடிகாலமைப்பு இல்லாமையால் நீர்பிடிப்புக் காரணமாக தீங்கு விளைவிக்கக் கூடிய உப்புகள் நுண்புழை நுழைவு காரணமாக மண்ணின் கீழ் அடுக்கிலிருந்து மேற்பரப்பிற்கு கடத்தப்படுகிறது.<br>• ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், பீகார், உத்தரப்பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், இராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிரா.<br>❖ **<u>களிமண் மற்றும் சதுப்பு நில மண்</u>**<br>• உயிரினப்பொருட்களிலிருந்து ஈர காலநிலை உள்ள பகுதிகளில் இம் மண் காணப்படுகிறது. இவ்வகை மண் கருமை நிறம் மற்றும் அதிககாரத் தன்மையுடையது.<br>• கேரளா, ஒடிசா, தமிழ்நாடு, மேற்கு வங்கத்தில், பீகார், உத்தரகாண்ட். | **5**<br>**(ஏதேனும் ஐந்து மண் வகைகள்)** |
| **36.** | ❖ **<u>சாலை போக்குவரத்து</u>**<br>• மாநிலத்தின் மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கிலோ மீட்டர் ஆகும்.<br>• இதில் 60,628 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலைதுறை மூலம் பராமரிக்கப்படுகிறது.<br>• பொதுத்துறை மற்றும் தனியார்துறை கூட்டணி இயக்கத் திட்டத்தின் கீழ்(PPP) மொத்த சாலைத் திட்டங்களில் 20% பங்களிப்புடன் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. | |


| | | |
|---|---|---|
| | ❖ **<u>இரயில்வே போக்குவரத்து</u>**<br>• தெற்கு இரயில்வேயின் தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது.<br>• சென்னையில் புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் ஆகியவை நன்கு வளர்ச்சியடைந்துள்ளன.<br>• மெட்ரோ இரயில்வே அமைப்பு, மே 2017 முதல் பாதாள இரயில் இயக்கத்துடன் இப்போக்குவரத்தை விரிவாக்கம் செய்து வருகிறது.<br>❖ **<u>வான்வழி போக்குவரத்து</u>**<br>• தமிழ்நாட்டில் 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.<br>• சென்னை சர்வதேச விமான நிலையமானது இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையமாக உள்ளது.<br>• கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியன நாட்டில் பிற சர்வதேச விமான நிலையங்கள் ஆகும்.<br>• தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியவை உள்நாட்டு விமான நிலையங்கள் ஆகும்.<br>❖ **<u>நீர்வழி போக்குவரத்து</u>**<br>• சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மூன்று முக்கிய துறைமுகங்களாகும்.<br>• நாகப்பட்டினத்தில் இடைநிலை துறைமுகமும் பிறபகுதிகளில் 15 சிறிய துறைமுகங்களும் இம்மாநிலத்தில் உள்ளன.<br>• தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறு துறைமுகங்களும் தமிழ்நாட்டின் கடல்சார் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது. | **5** |
| **37.** | **<u>இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள்</u>**<br>• பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.<br>• தான் தலைமைவகிக்கும், அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் குறித்து முடிவு செய்வார்.<br>• காபினெட் அமைச்சரவை கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம்.<br>• பிரதம அமைச்சர் பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.<br>• நடுவண் அரசின் விவகாரங்கள் மற்றும் சட்டத்திற்கான முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத்தலைவருடன் விவாதிக்கிறார்.<br>• பிரதம அமைச்சர் என்பவர் குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.<br>• பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார்.<br>• அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.<br>• சர்வதேச மாநாடுகளான காமன் வெல்த், அணி சேராநாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார். | **5**<br>**(ஏதேனும் ஐந்து)** |

| | | |
|---|---|---|
| 38. | **இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்**<br>• உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.<br>• இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.<br>• இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.<br>• கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.<br>• இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.<br>• சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.<br>• உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப் படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது. | 5<br>(ஏதேனும் ஐந்து) |
| 39. | ❖ **மொத்த நாட்டு உற்பத்தி**<br>• மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்தநாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும்.<br>• வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.<br>• GNP=C+I+G+(X-M)+NFIA<br>❖ **மொத்த உள்நாட்டு உற்பத்தி**<br>• ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்) களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.<br>❖ **நிகர நாட்டு உற்பத்தி**<br>• மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகரநாட்டு உற்பத்தியாகும்.<br>• நிகரநாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்.<br>❖ **நிகர உள்நாட்டு உற்பத்தி**<br>• நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும்.<br>• மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.<br>• நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம்.<br>❖ **தலா வருமானம்**<br>• தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.<br>• நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.<br>• தலா வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை | 5<br>(ஏதேனும் நான்கு கருத்துகள்) |

<table>
<tr><td></td><td>

❖ <u>தனிப்பட்ட வருமானம்</u>
<ul><li>நேர்முக வரி விதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.</li></ul>
❖ <u>செலவிடத் தகுதியான வருமானம்</u>
<ul><li>தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனலாம்.</li>
<li>DPI= தனிப்பட்ட வருமானம் – நேர்முக வரி</li></ul>
</td><td></td></tr>
<tr><td>40.</td><td>
<ul><li>வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்துகை அகும். அரசிடமிருந்து எந்தவித நேரடி நன்மையும் எதிர்பார்க்காமல் கட்டாயமாக செலுத்த வேண்டியதே வரி.</li></ul>
<u>வரிகளின் வகைகள்</u><br>
1. நேர்முக வரி 2.மறைமுக வரி<br>
<u>1.நேர்முக வரிகள்</u><br>
➢ <u>வருமானவரி</u>
<ul><li>வருமான வரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முகவரி முறையில் மிக முக்கியமான வரியாகும்.</li>
<li>இவ்வரி தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது.</li>
<li>இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக் கூடியதாகும்.</li></ul>
➢ <u>நிறுவன வரி</u>
<ul><li>இந்த வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது.</li>
<li>இந்த வரி வெளிநாட்டு நிறுவனங்கள் பெரும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது.</li></ul>
➢ <u>சொத்து வரி (அ) செல்வ வரி</u>
<ul><li>தனது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரியாகும்.</li>
<li>ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது.</li></ul>
❖ <u>மறை முகவரிகள்</u><br>
➢ <u>முத்திரைத்தாள் வரி</u>
<ul><li>அரசாங்க ஆவணங்களான திருமண பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப்பத்திரங்கள் போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும்.</li></ul>
➢ <u>பொழுது போக்கு வரி</u>
<ul><li>எந்தவொரு பொழுது போக்கு மூலங்களாக இருந்தாலும், அதன் மீது அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரிபொழுது போக்கு வரியாகும்.</li></ul>
➢ <u>சுங்கத்தீர்வை (அல்லது) கலால் வரி</u>
<ul><li>விற்பனையை விட, உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்திப்பொருட்களின் மீதும் விதிக்கப்படும் வரியாகும்.</li></ul>
</td><td>1<br><br>1<br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>3</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **41.** | **<u>காலக்கோடு</u>**<br><br>• 1914 – முதல் உலகப்போர் தொடக்கம்<br>• 1916 – தன்னாட்சி இயக்கம் / லக்னோ ஒப்பந்தம்<br>• 1917 – சம்பரான் சத்தியாகிரகம்<br>• 1918 – கேதா சத்தியாகிரகம் / முதல் உலகப்போர் முடிவு<br>• 1919 – ரௌலட்சட்டம் / ஜாலியன் வாலாபாக் படுகொலை<br>• 1920 – கிலாபத் இயக்கம் / ஒத்துழையாமை இயக்கம்<br>• 1922 – சௌரி சௌரா சம்பவம்<br>• 1923 – சுயராஜ்ஜியக்கட்சியின் தோற்றம்<br>• 1927 – சைமன் குழு நியமனம்<br>• 1928 – மோதிலால் நேரு அறிக்கை<br>• 1929 – லாகூர் காங்கிரஸ் மாநாடு / பொருளாதார பெருமந்தம்<br>• 1930 – உப்பு சத்தியாகிரகம் / முதல் வட்டமேசை மாநாடு<br>• 1931 – காந்தி–இர்வின் ஒப்பந்தம்/இரண்டாவது வட்டமேசை மாநாடு<br>• 1932 – வகுப்பு வாரி பிரதிநிதித்துவம்/பூனா ஒப்பந்தம்/ மூன்றாவது வட்டமேசை மாநாடு<br>• 1935 – இந்திய அரசு சட்டம்<br>• 1937 – மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்படுதல்<br>• 1939– இரண்டாம் உலகப்போர் தொடக்கம்<br>• 1940 – ஆகஸ்ட் நன்கொடை/ தனிநபர் சத்தியாகிரகம் | **5**<br><br>**(ஏதேனும் ஐந்து நிகழ்வுகள்)** |

| | | |
|---|---|---|
| **42.** |  | **5** |


## பகுதி– IV

**அனைத்து வினாக்களுக்கும்விடையளிக்கவும்** 2×8=16

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 43 (அ) | • 1930 ஜனவரி 26ஆம் நாள் சுதந்திரத் திருநாளாக அறிவிக்கப்பட்டு வரிகொடா இயக்கம் உள்ளிட்ட சட்டமறுப்பு இயக்கம் மூலமாகவும் வன்முறையற்ற முறையில் முழுமையான சுதந்திரத்ததை அடைவது குறித்தும் நாடு முழுவதும் உறுதிமொழி ஏற்கப்பட்டது.<br>• இந்த இயக்கத்ததைத் தொடங்க இந்திய தேசிய காங்கிரஸ் காந்தியடிகளுக்கு அங்கீகாரம் அளித்தது.<br>❖ **<u>உப்பு சத்தியாகிரகம்</u>**<br>• 1930 ஜனவரி 31ஆம் நாளுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்ற காலக்கெடுவுடன் அரசப்பிரதிநிதி (வைசிராய்) இர்வின் பிரபுவிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு கொடுக்கப்பட்டது. அவை கீழ்க்கண்டவையாகும்:<br>• இராணுவம் மற்றும் ஆட்சிப்பணி சேவைகளுக்ககான செலவுகளை 50 சதவிகிதம் வரைகுறைப்பது. முழுமையான புறக்கணிப்பபை அறிமுகம் செய்வது.<br>• அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது. நிலவருவாயை 50 சதவிகிதமாக குறைப்பது. உப்பு வரியைரத்து செய்வது.<br>❖ **<u>உப்பு சத்தியாகிரக இயக்கத்தின் அம்சங்கள்.</u>**<br>• கோரிக்கை மனுவுக்கு அரசப் பிரதிநிதி பதில் தெரிவிக்ககாத நிலையில் காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்ததை தொடங்கினார்.<br>• உப்பு மீதான வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு அறிவுபூர்வமான முடிவாகும்.<br>• காந்தியடிகள் 1930 மார்ச் மாதம் 12ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ் பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கினார். இப்பாதையாத்திரையில் நூற்றுக் கணக்கானோர் சேரச்சசேர அது நீண்டு கொண்டே போனது.<br>• காந்தியடிகள் தனது 61 ஆவது வயதில் 24 நாட்களில் 241 மைல் தொலைவு யாத்திரையாக நடந்து சென்று 1930 ஏப்ரல் 5ஆம் நாள் மாலை தண்டி கடற்கரையை அடைந்ததார்.<br>• அடுத்தநாள் காலை ஒரு கைப்பிடி உப்பபைக் கையில் எடுத்து உப்புச்சட்டத்ததை மீறினார். | 8 (ஏதேனும் எட்டு கருத்துகள்) |
| | **(அல்லது)** | |
| 43 (ஆ) | ❖ **<u>நீதிக்கட்சி தோற்றம்</u>**<br>• 1916 நவம்பர்20 இல் டாக்டர் நடேசனார், சர்பிட்டி தியாகராயர், டி.எம். நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட30 முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (South Indian Liberal Federation) உருவாக்க ஒருங்கிணைந்தனர்.<br>• கட்சியின் கொள்கைகளைப் பரப்புரைசெய்வதற்காகத் தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிக்கைகளை வெளியிட்டது. | 3 (ஏதேனும் மூன்று கருத்துகள்) |


| | | | |
|---|---|---|---|
| | • 1920இல் முதல் தேர்தல் நடைபெற்றது. நீதிக்கட்சி தேர்தலில் வெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது.<br>• A.சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். மேலும் நீதிக்கட்சி 1920– 1923 மற்றும் 1923–1926 ஆகிய ஆண்டுகளில் அரசமைத்தது.<br>• காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்த சூழலில் நீதிக்கட்சி 1937இல் தேர்தல் நடைபெறும் வரை ஆட்சி தொடர்ந்து நீடித்தது.<br>• 1937 தேர்தல்களில், முதன் முதலாகப் பங்கேற்ற இந்திய தேசிய காங்கிரஸ் நீதிக்கட்சியை படுதோல்வி அடையச் செய்தது.<br><br>❖ **<u>திட்டங்களும் செயல்பாடுகளும்</u>**<br>• சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக்கட்சியினர் அகற்றியதோடு பொதுக் கிணறுகளையும் நீர்நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர்.<br>• ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது.<br>• இச்சமூகக்குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென 1923இல் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன.<br>• நீதிக்கட்சியின் கீழிருந்தசட்டமன்றம் தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921இல் அங்கீகரித்தது.<br>• இத்தீர்மானம் பெண்களுக்கென இடத்தை ஏற்படுத்தியதால் 1926இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது.<br>• பல்வேறு சமூகங்களுக்கான இட ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நீதிக்கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டங்களை இயற்றும் பணிகளை மேற்கொண்டது.<br>• சமூகநீதியை நிலை நாட்டுவதின் ஒரு பகுதியாக பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமானவாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் (1921 செப்டம்பர் 16 மற்றும் 1922 ஆகஸ்ட் 15) இயற்றப்பட்டன.<br>• நிர்வாக அதிகாரங்களை அனைத்து சமூகத்தினரும் பங்கிட்டுக்கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய 1924இல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்தது.<br>• இம்முறையைப் பின்பற்றி பிரிட்டிஷ் இந்திய அரசு 1929இல் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கியது.<br>• இவைகள் தவிரசமய நிறுவனங்களை சீர்திருத்துவதிலும் நீதிக்கட்சி கவனம் செலுத்தியது. நீதிக்கட்சி 1926இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது.<br>• அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோவில்களின் நிர்வாகக்குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது. | **5**<br><br>**(ஏதேனும் ஐந்து கருத்துகள்)** |

**44 (அ)**




**(8 மதிப்பெண்கள்)**

**(அல்லது)**

| | |
|---|---|
| **44 (ஆ)** |  <br>**(8 மதிப்பெண்கள்)** |

**SSLC PUBLIC EXAMINATIONS – MAR / APR 2025**

**ANSWER KEY – ERRATUM**

**SUBJECT : SOCIAL SCIENCE**

**MEDIUM : TAMIL**

**பகுதி –1**

| வினா எண் | குறியீடு | விடை | மதிப்பெண் |
|---|---|---|---|
| 4. | - | விடையெழுத முயற்சி செய்திருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம் | 1 |

ஒம்/–

**இயக்குநர்**